# வழிபாட்டு மரபுகளில் அறிவியல் கூறுகள்

## (விளக்கும், நறும்புகையும்)

39

**சா.மணிமேகலை**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ் துறை, சுயநிதி பிரிவு**
**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ,ஈரோடு -12**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்கள் நெடுங்காலமாக் கடைபிடித்து வரும் பழக்க வழக்கங்கள் அறிவியல் சார்ந்தவை . அன்றாட வாழ்வில் நம் முன்னோர்கள் கடைபிடித்த பழக்க வழக்கங்கள் உணவு முறைகளைக் கையாண்டு வாழ்ந்தால் மனிதன் உடல் மன ஆரோக்கியம் கொண்டு வாழ முடியும்.ஆனால் தற்போதைய சூழ்நிலையில் வாழ்வியல் முறைகள் பெருமளவு மாற்றம் கொண்டு ஒவ்வோர் மனிதனுக்கும் பெயர் சொல்ல முடியாத ஏதாவது ஒரு வியாதி ஆட்கொண்டு விடுகிறது.இதற்குக் காரணம் இயற்கைக்கு மாறுபாடான நமது வாழ்வியல் செயல்பாடுகள் காரணம் எனலாம்.இருப்பினும் சில செயல் முறைகளை அன்றாடம் முறைப்படி கடைபிடித்து வந்தால் நம் வாழ்வில் நன்மைகள் ஏராளம் பெறலாம்.என்ற வகையில் அன்றாடம் செய்யப்படும் வழிபாட்டுக் கூறுகளில் ஒன்றான திருவிளக்கும் நறும்புகையும் பற்றிய இலக்கியச் சான்றுகள் மற்றும் அவற்றின் அறிவியல் கூறுகள் பற்றி விளக்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள்**

ஜொதி- ஒளி சாம்பிராணி -ஒரு வகை மரத்திலிருந்து கிடைக்கும் நறுமணப் பொருள் மூதூர்- பழமையான ஊர் கடினகர் - காவல் மிகுந்த ஊர்.

**ஆய்வு நோக்கம்**

அறிவியல் வளர்ச்சி மனிதனின் வாழ்வில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தாலும், நெடுங்காலமாக நம் முன்னோர் அன்றாடச் செயல்பாடுகளில் மனிதனுக்கு உடல் மன ஆரோக்கியம் மேம்படும் வகைகளை அறிந்து அதனை கையாண்டனர். அத்தகைய பழமையான மரபுகள் பற்றி தமிழ் இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. அத்தகைய பழம் மரபுக் கூறுகளில் ஒன்றான விளக்கேற்றலும் நறும்புகையூட்டலும் மனிதனுக்குப் பல்வேறு நன்மைகளை கொடுக்கக்கூடியன அதனை வரும் காலச் சந்ததியினரும் அறிந்து கொண்டு பயனடைய வேண்டும் என்பது இந்த ஆய்வின் நோக்கம்.

**முன்னுரை**

உலகம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது எனலாம். ஆற்றல் மிக்க அச்சக்தியிடம் வழிபாடுகளின் வழியாக மனிதன் தொடர்பு கொள்ள முயல்வதைச் சமயம் ஆகும். சமயம் ஓர் மனச்சார்வு. புலன் உணர்வுக்கும் பல்வேறு பெயர்களுடனும் தோற்றங்களுடனும் எல்லையற்ற பரம் பொருளை அறிந்து கொள்ள உதவுவது என்பார் சமய அறிஞர் மார்க்ஸ் முல்லா. தெய்வ வழிபாடுகளில் அறிவியல் தன்மையானது இயற்கை வழிபாடாகத் தொடங்கிப் பின்னர் சிறு தெய்வம் பெருந்த தெய்வமாக வளர்ந்தது எனலாம். முன்னோர்கள்

தொடங்கிய இந்த வழிபாடுகளின் செயல்கள் ஒவ்வொன்றிலும் ஆழ்ந்து நோக்கும் போது அறிவியல் கூறுகள் மிகுந்துள்ளன அத்தகையவழிபாட்டுக் கூறுகளில் முதன்மையானதாகவும், ஒளி பொருந்தியதாகவும் உள்ள இறைவனுக்கு நறும்புகை காட்டல் மற்றும் விளக்கு ஏற்றலின் அறிவியல் சார்ந்த உண்மைகள் குறித்து இக்கட்டுரையில் ஆராய்ந்து கூறப்படுகிறது.

**விளக்கு வழிபாட்டின் தோற்றம்**

தமிழர்கள் ஐம்பூதங்களையும் வழிபாடு செய்பவர்கள் அவற்றில் நெருப்புக்கு மட்டும் தனியிடம் தருகின்றனர் ஏனென்றால் தீயை நாம் உருவாக்கவும் அணைக்கவும் இயலும். வேள்வி' தீபம், கற்பூரம் போன்றவற்றைக் கையெடுத்து வணங்கும் மரபு தமிழர்களிடையே நெடுங்காலமாக இருந்து வருகிறது.

விளக்கு வழிபாடுகள் மனிதனுக்கு உடல் மன ஆரோக்கியம் பெறுவதற்கும் சுற்றுப்புற தூய்மையைக் காக்கவும் ஆற்றல் கொண். 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்ஜோதி' என்றும், 'சோதியை சுடரே சூழ் ஒளி விளக்கே' என்றும் திருவாசகத்தில் ஒளியை சிவனாகப் போற்றி வழிபட்டதை அறிய முடிகிறது. பழங்காலத்தில் ஒளியின் வடிவில் இறைவனை வழிபட்டதின் தோற்றமே விளக்கேற்றி இறைவனை வழிபடும் வழிபாடாக எண்ணலாம்.

**இலக்கியங்களில் விளக்கேற்றல் பற்றிய செய்திகள்**

தமிழர்கள் நெடுங்காலமாக வீடுகளிலும் கோயில்களிலும் விளக்கேற்றி வழிபடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர் இருள் அகற்றி ஒளி கொடுப்பது விளக்கு. மண் விளக்கிற்கு தத்துவம் கூறப்படுகிறது. மண்ணால் செய்யப்பட்ட விளக்கு உடைந்தால் மண் ஆவது போலவே மனித வாழ்வும் நிலையற்றது. விளக்கேற்றி வழிபடுவதற்கு என்றே கார்த்திகை தீபத்திருநாள் கொண்டாடப்பட்டு வந்துள்ளது எனலாம்.

**"மழைக்கால் நீங்கிய மாசு விசும்பில்**
**குறும் முயல் மறு நிறம் கிளற, மதி நிறைந்து,**
**மரறுகும் விளக்குறுத்து, மாலை தூக்கி**
**பழவிரல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுடன் அயர்"** [1]

(அகம் பாடல்-141)

இப்பாடலின் பொருளானது வானில் சிறிய முயலாகி மருவின் நிறம் தோன்ற முழுமதி நாளில் இருள் அகற்ற நள்ளிரவில் வீடுகளும் தெருக்களும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டன என்று சங்க இலக்கிய அகநானூற்றுப் பாடலினைக் கொண்டு தமிழர்கள் காலங்காலமாக விளக்கு வைத்து வழிபடுவதை பண்பாட்டு மரபாகக் கொண்டுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

**விளக்கேற்றலின் அறிவியல் தன்மைகள்**

விளக்கு வழிபாடுகள் மனிதனுக்கு உடல் மன ஆரோக்கியம் பெறுவதற்கும் சுற்றுப்புற தூய்மையைக் காக்கவும் ஆற்றல் கொண்டவை எனலாம்.

விளக்கின் சுடருக்கு தன்னைச் சுற்றியுள்ள தேவையற்ற கதிர்களை ஈர்க்கும் சக்தி உண்டு. தேவையற்ற சக்திகளை ஈர்த்துக் கொண்டு நல்ல கதிர்களை சுற்றுப்புறத்திற்குத் தருவதால்

சுற்றுப்புறம் தூய்மை அடைவதோடு மனிதர்களின் மனநலமும் மேன்மையடைகிறது.

நம் உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களில் மூலாதாரமும் சுவாதிஸ்தானமும் நல்லெண்ணெய் விளக்கு ஏற்றுவதால் தூய்மை அடைகிறது அதேபோல் மணிப்பூரகம் அனாகதம் இரண்டும் நெய் விளக்கேற்றுவதாலா தூய்மை அடைந்து நற்பலனைத் தருகின்றன.

காலையும் மாலையும் விளக்கேற்றி வழிபாடு செய்வது கிராம மக்களிடையில் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது தனது குடும்பத்தில் உள்ளோர்களின் ஆரோக்கியத்தை பேணுவதற்கும் சுற்றுப்புறத் தூய்மையை பாதுகாப்பதற்கும் அறிவியல் ரீதியாக விளக்கேற்றுவது பெரும் நன்மை கொண்டதாக உள்ளது.

**இலக்கியங்களில் நறும்புகை காட்டல் பற்றிய செய்திகள்**

சமய வழிபாடுகளில் விளக்கு ஏற்றுவதற்கு அடுத்ததாக பல மனம் மிக்க பொருட்கள் கொண்டு நறும்புகை காட்டுவது வழக்கமாகும். கோயில்களிலும் வீடுகளிலும் நறுமணமிக்க பொருள்களை எரித்துத் தூபம் காட்டுகின்றனர் சங்க இலக்கியங்களில் முருகப் பெருமானுக்கு நறும்புகையூட்டிய செய்தியையும் பெண்கள் தங்கள் கூந்தலுக்கு நீராடிய பிறகு நறும்புகையூட்டிய செய்திகளையும் அறிய முடிகிறது.

"கறையில் கார் மழை பொங்கி யன்ன
நரையின் நறும்புகை நனி அமர்ந்தோயே" [2]

. (பரிபாடல் ஒன்பது வரிகள் 19, 20)

கார்காலத்தில் வெண்மேகம் பரவுவது போன்று நல்ல நறுமணமிக்க அகில் சந்தனம் கலந்த நறும் புகையை விரும்புபவன் முருகப்பெருமான் என்ற பொருளில் பாடப்படுகிறது.

நெடுங்காலமாய் உள்ளது.பட்டினப்பாளையில் காவிரி பூம்பட்டினத்தில் உள்ள தவப் பள்ளிகளில் முனிவர்கள் நறும்புகை வளர்த்துள்ளனர் என்ற செய்தி உள்ளது.

. "ஆவுதி நரம்புகை முனைஇ குயில்தம்
மாயிரும் படையோடு இரியல் போகிப்
பூதம் காக்கும் புகழரும் கடின நகர்த்
தூதணம் புறவொடு துஞ்சசிற் சேர்க்கும்" [3]

(பட்டினப்பாலை, பா-55-58)

என்ற பாடலில் நறும்புகையைக்கண்டு அஞ்சிய குயிலினங்கள்பாதுகாப்பைத் தேடிப் பறந்த என்று கூறப்படுகிறது. இலக்கியங்களில் நறும்புகை பற்றிய செய்திகளைப் பார்க்கும்போது, தமிழர்களிடையே நெடுங்காலமாக நறும்புகையிடும் வழக்கம் இருந்து வந்த செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது.

கோயில்களில் இறைவனுக்கு நறும்புகை காட்டி வழிபட்டதோடு வீடுகளிலும் மாலை நேரங்களில் மக்கள் நறும் புகை காட்டுவதைக் கடைபிடித்து உள்ளனர் என்பதனைக் புறநானூற்றுப் பாடலில் அறியப்படுகிறது.

"துகில் விரி கடுப்ப நுணங்கி தண்ணென

அகிலார் நறும்புகை அது சென்றடங்கிய
கபில நெடுநகர் கமலு நாற்றமமொடு" 4

-கபிலர் (புறநானூறு பாடல் -337-வரி 11)

தனது கூந்தலுக்குத் தலைவி ஊட்டிய புகையின் நறுமணம் அவள் வாழ்ந்த நெடுநகர் முழுதும் வீசியது என்று கூறப்படுகிறது இவ்வாறு சங்க காலம் முதல் இன்று வரை நறும்புகையூட்டி இறைவனை வழிபாடு செய்வதும் வீடுகளில் மாலை நேரங்களிலும் விழா காலங்களிலும் நறும்புகை ஊட்டுவதோடு பெண்கள் தங்கள் கூந்தலுக்கு நறுமுகையூட்டுவது தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது குழந்தைகளுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டாலும் நரம்புகள் காட்டப்படுகிறது இவ்வாறு காட்டினால் குழந்தையின் உடலில் உள்ள தீய சக்திகள் வெளியேறுவதுடன் குழந்தையின் உடலில் உள்ள நோய் பாதிப்புகளும் வெளியேற்றப்படுகின்றன என்பது இன்றைய கிராமப்புற மக்களின் முழு நம்பிக்கையாக உள்ளது.

பக்தி இலக்கியக் காலகட்டங்களில் பெரியபுராணத்தில் நறும்புகை பற்றி கூறப்பட்டுள்ளது. குங்கிலியக் கலைய நாயனார் என்ற நாயனார் சிவபெருமான் மீது மிகுந்த பக்திகொண்டு குங்கிலியத்தினால் நறும்புகை காட்டி வழிபடுவதில் பேரார்வமும் ஆனந்தமும் கொண்டவர் ஒரு காலத்தில் அவருக்கு குங்கிலியம் வாங்கப் பொருளாதார வசதி இல்லாத போய் விடுகிறது இருப்பினும் தனது மனைவியின் மாங்கல்யத்தை விற்றுச் சிவபெருமானுக்கு குங்கிலியம் வாங்கி நறும்புகை காட்டி மகிழ்கிறார். இத்தகு இலக்கியச் செய்திகளை உற்று நோக்கும்போது நறும் புகை காட்டி வழிபாடு செய்ததின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**நறுமணப் புகையின் அறிவியல் கூறுகள்**

நம் முன்னோர்களின் செயல்பாட்டு வழக்கறிஞர்கள் ஒவ்வொன்றிலும் ஆழ்ந்து கவனித்தோமானல் அதில் ஏதாவதொரு அறிவியல் கூறு உள்ளடக்கியிருக்கும். நறும்புகை காட்டிலும் அறிவியல் தன்மை பொதிநாதுள்ளது எனலாம்.

சாம்பிராணி குங்கிலியம் போன்றவற்றைக் கொண்டு வீடுகளில் காட்டப்படும் நறுமணப் புகையால் தேள் பூரான் பாம்பு போன்ற விஷ பூச்சிகள் ஓடிவிடும் ஏனென்றால் நறுமணம் வீசும் இடங்களில் விஷமுள்ள பூச்சிகள் தங்குவதில்லை.

வீடுகளில் சாம்பிராணி புகை பரவ விடுவதால் நச்சுக்கிருமிகள் அளிக்கப்படுகின்றன மேலும் சாம்பிராணி புகை நரம்பு மண்டலத்தையும் மனதையும் அமைதிப்படுத்தும் ஆற்றல் கொண்டதாக கூறப்படுகிறது.

நறுமணப்புகை சாம்பிராணி புகையானது உடலில் உள்ள ராஜ உறுப்புகள் அனைத்தையும் எவ்விதமான வியாதிகளையும் நெருங்காமல் காக்கும் சிறப்புடையது தலைமுடிக்கு சாம்பிராணி புகை காட்டுவதனால் தலைமுடி கருமையாகவும் நரைகள் இல்லாமலும் வளரும். "கார்பன் டை ஆக்சைடு சல்பர் டையாக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு போன்ற நச்சு வாயுக்கள் காற்றில் கலந்திருப்பதால் அதிலிருந்து குழந்தைகளைக் காக்க சாம்பிராணிப்புகையிலிருந்து வரும் புகையினால் குழந்தைகளின் தொண்டைத் தொற்று மற்றும் உடலின் நுண்ணுயிர்க் கிருமிகள் அழிக்கப்படுகிறது." 5

தற்போதைய ஆய்வுகளில் சாம்பிராணி மர பிசின்களில் உள்ள வேதிப்பொருட்கள் புற்று புற்றுநோய் கட்டிகளைக் கரைக்கக்கூடிய மருத்துவத் தன்மை கொண்டது என்று ஆய்வாளர்கள்

கூறுகின்றனர்

கிராமப்புறங்களில் விரகுகளைக் கொண்டு தனல் மூட்டி அதற்குள் சாம்பிராணி குங்கிலியம் மஞ்சள் வேப்பிலை இன்னும் பல பொருட்கள் சேர்த்துக் குழந்தைகளுக்கு காட்டுகின்றனர் இவ்வாறு காட்டுவதால் குழந்தைகளின் சலித்தொல்லை, கண் திருஷ்டி போன்றன விலகி விடும்

**முடிவுரை**

நம் முன்னோர்கள் கடைப்பிடித்த செயல்கள் ஒவ்வொன்றிலுமே போர் அறிவியல் கூறுகள் உள்ளடங்கியுள்ளன இடைக்காலத்தில் அவை மூடநம்பிக்கைகள் என்றும் பயனற்றவை என்றும் கருதப்பட்டுக் கைவிடப்பட்டன. நெருப்புத்தொடர்பான வழிபாடுகள் மனித நாகரீக வளர்ச்சி ஏற்பட்ட காலத்திலிருந்து தொடங்கப்பட்டு வழிபடப்பட்டுள்ளன. நாட்டார் தெய்வங்களில் தீச்சட்டி எடுப்பதும் தீமிதிப்பதும் ஒரு அறிவியல் சடங்கின் உள்நோக்கம் எனலாம். இதவயெல்லாம் கோயில்களில் மட்டுமே செய்யக்கூடியவை. ஆனால், வீடுகளிலும் கோயில்களிலும், தொழில் செய்யும் இடங்களிலும் வழக்கமாகத் தீபங்கள் ஏற்றப்பட்டும் தூபங்கள் காட்டப்பட்டும் வருகின்றன வெளிப்படையாக இவை ஒரு சடங்கு நோக்காக கருதப்பட்டாலும் உள்ளார்ந்த கருத்துப்படி இவற்றில் பெரும் அறிவியல் கூறுகள் அடங்கியுள்ளன எனவே, நமது முன்னோர்களின் வழிபாடுகளில் முதன்மையானதாகச் செய்யப்பட்ட தீப தூப வழிபாட்டினை நாம் என்றென்றும் கடைப்பிடிப்பதோடு, நமது வருங்காலச் சந்ததியினர்களுக்கும் அதனை எடுத்துச் செல்வோம்.இயற்கையாகக் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு காட்டப்படும் தீப தூபங்கள் மட்டுமே பயனுள்ளவை.

**குறிப்பு:** இயற்கையான எண்ணெய் தீபங்கள் மற்றும் இயற்கையான பொருட்கள் கொண்டு பழங்கால முறைப்படி நறும் புகை காட்டல் மட்டுமே நலம் தரும்.

**அடிக்குறிப்புகள்**

1. நக்கீரர், அகநானூறு
2. கேசவனார், பரிபாடல்
3. உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை
4. கபிலர், புறநானூறு
5. தகவலாளர், கதிரேசன். திருப்பூர் மாவட்டம்

**துணை நூல் பட்டியல்**


1. அகநானூறு- கழக வெளியீடு
2. புலியூர் கேசிகன் (உரை)
   பட்டினப்பாலை
   சாரதா பதிப்பகம்
   சென்னை 600014
   9790706549

3. புறநானூறு
கழக வெளியீடு

4. கதிரேசன்,
தகவலாளர் -வயது 45
படிப்பு- எம்.ஏ,
கொடுவாய், திருப்பூர் மாவட்டம்.